n Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC

தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரி - (தே.பா)

முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 10

சுட்டெண் .....

தமிழ் மொழியும் இலக்கியமும் I

நேரம் : 1 மணித்தியாலங்கள்

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

பகுதி I

1. "நாயணையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்" இங்கு கேண்மை என்பது
   (1) நட்பு (2) பகைமை (3) உறவு (4) அடிமை

2. "வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பார்" இங்கு வெகுளி என்பது
   (1) அமைதி (2) மனம் (3) கோபம் (4) சாந்தம்

3. வைத்தியசாலைகளில் தாதிகளின் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளன. இதில் தாதி என்பதன் எதிர்ப்பால்
   (1) தமையன் (2) ஐயன் (3) தாதன் (4) வேடன்

4. நெறி திரம்பாத் தன் மெய்யை நிற்பது ஆக்கி..... இங்கு மெய் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   (1) வாய்மை (2) பொய் (3) உடம்பு (4) சத்தியம்

5. "தாண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்..." இதில் மண்டுகம் என்பது
   (1) பேதை (2) அறிவிலி (3) வண்டு (4) தவளை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. "எள்துணையானும் இரவாது தான்ஈதல்" இங்கு இரத்தல் என்பது
   (1) ஈதல் (2) யாசித்தல் (3) கொடுத்தல் (4) ராத்திரி

7. சென்சஸ் (Census) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்
   (1) இனம் (2) தொகை மதிப்பு (3) மதிப்பீடு (4) ஆர்வம்

8. ஒத்த கருத்துள்ள சொற்களைக் கொண்ட தொகுதி அல்லாதது
   (1) அனுகூலம் - பிரதிகூலம் (2) அழகு - வனப்பு
   (3) எதிர்வாதம் - பிரதிவாதம் (4) கனவு - சொப்பனம்

9. புரவி, புரி, அசுவம் எனும் பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
   (1) குதிரை (2) ஆழி (3) மலை (4) குரங்கு

10. தோள் கொடுத்தல் என்னும் மரபுத் தொடரின் கருத்து,
    (1) தோளைக் கொடுத்தல் (2) உதவி செய்தல்
    (3) சாமி தூக்குதல் (4) கடன் பெறுதல்

www.lkedu.lk

11. நண்டிற்கு அலவன் என்பது போல குதிரைக்கு
(1) குண்டு (2) கடுவன் (3) களிறு (4) கடா

12. கிழிஞ்சி, தேள்வை என்பன எப்பிரதேசத்திற்குரியவை
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

13. அலுமாரி, யன்னல், சாவி என்பன
(1) ஒல்லாந்து மொழிச் சொல் (2) போர்த்துக்கேய மொழிச் சொல்
(3) ஆங்கில மொழிச் சொல் (4) பாரசீக மொழிச் சொல்

14. எதிர்பார்த்துக் காத்திருத்தல் என்னும் பொருள் தரும் அருஞ்சொற்றொடர்
(1) கூடிக்குலாவி (2) வழிமேல் விழி வைத்து
(3) வாழையடி வாழையாக (4) நுண்மான் நுழை புலம்

15. பின்வரும் சொற்களில் ககரம் (g) ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக ஒலிப்பது
(1) கப்பல் (2) சுகம் (3) தங்கம் (4) தரவு

16. எலியும் பூனையும் போல என்ற உவமைத் தொடர் சொற்றொடர் உணர்த்தும் பொருள்
(1) பிரியா நட்பு (2) நிரந்தர பகை
(3) இருவரின் ஒற்றுமை (4) ஒன்றாய் வாழ்தல்

17. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக வருவது
(1) மேலே மேலே (2) தன்னந்தனி
(3) கூடிக்குலாவி (4) கள்ளங்கபடம்

18. அலை வரும் போதே தலை முழுகு என்ற பழமொழிக்கு நிகரான வேறோர் பழமொழி
(1) சந்தர்ப்பத்தை தவற விடாதே (2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
(3) காற்றுள்ள போதே தூற்றிக் கொள் (4) காலத்தே பயிர் செய்

19. "அடாது செய்தவன் படாது படுவான்" என்னும் பழமொழி விளங்குவது
(1) துன்பத்தில் இன்பம் காண்பான்
(2) துன்பமிழைப்பவன் பின்னர் இன்பமடைவான்
(3) இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும்
(4) அநியாயம் செய்தவன் மிக்க துன்பமடைவான்

20. மாற்றொலியாக வரும் எழுத்துக்கள்
(1) ய, ர, ல, ழ (2) க, ச, த, ப
(3) ஞ, ண, ன, ம (4) ப, ண, ம, ய

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.**

21. கப்பல் நாளை புறப்படுகின்றது. என்பது
(1) எண் வழு (2) கால வழு (3) திணை வழு (4) பால் வழு

22. "சிவந்த கண்களுடன் சேரன் பேரிட்டான்" இவ்வாக்கியத்தில் பெயரடை
(1) கண்கள் (2) சேரன் (3) சிவந்த (4) போரிடல்

23. "பேனை கொண்டு எழுதினான்" இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்
(1) கருவிப் பொருள் (2) கருத்தாப் பொருள்
(3) கொடைப் பொருள் (4) உடனிகழ்ச்சி பொருள்

24. அவன் ஒழுங்காக படித்தான்.
பரீட்சையில் சித்தியடையவில்லை.
மேற்படி இரு வாக்கியங்களையும் இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) ஆகவே (2) உம் (3) ஆனால் (4) ஏனென்றால்

25. நாளை சிவராத்திரி காரணமாகப் பாடசாலை விடுமுறை எனக் கல்வி அமைச்சு கூறியது. இங்கு கல்வி அமைச்சு கூறியது என்பது
(1) தலைமைத் தொடர் (2) எச்சத் தொடர்
(3) இடைச் சொல் (4) சார்புத் தொடர்

26. நாளை பரீட்சை ஆரம்பம் என்று அதிபர் கூறினார். இது எவ்வகை வாக்கியம்
(1) தனி வாக்கியம் (2) கலப்பு வாக்கியம்
(3) தொடர் வாக்கியம் (4) கூட்டு வாக்கியம்

27. வெற்றிலை என்பதைப் பிரித்து எழுதினால்
(1) வெறுமை + இலை (2) வெற்றி + இலை
(3) வெறு + இலை (4) வெற்று + இலை

28. எல்லாப் புகழும் இறைவனுக்கு என கைகளை விரித்தான் ஒருவன். இவ்வாக்கியத்தின் எழுவாயாக அமைவது.
(1) இறைவன் (2) புகழ் (3) கைகள் (4) ஒருவன்

29. அவன் பாடிய ஒவ்வொரு
(1) பாடல்களும் இனியவை (2) பாடலும் இனியது
(3) பாடல்களும் இனியன (4) பாடல்களும் இனியவை

30. பின்வருவனவற்றுள் காரணப் பெயராக அமைவது,
(1) கல் (2) மண் (3) கொழும்பு (4) வைத்தியசாலை

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்க**

31. விபத்தில் சிக்கிய பெண்ணொருத்தி ..... இன்றிக் கிடந்தாள்
(1) பணம்பதவி (2) குடும்பம் (3) மூச்சுப் பேச்சு (4) சுற்றம்

32. ஆட்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் ..... வழங்கப்பட்டது.
(1) மானியம் (2) சம்பளம் (3) நிவாரணம் (4) ஓய்வூதியம்

33. கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் செயற்பாடு .....
(1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) மேடையேற்றம்

www.kedu.lk

34. விபத்தில் ஏற்படக் கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்கு தனி நபரோ அல்லது நிறுவனமோ முன்கூட்டியே செய்து கொள்வது .....
(1) காப்புறுதி (2) சேமிப்பு (3) மானியம் (4) முதலீடு

35. நாட்டின் வரலாற்றை உணர்த்துவனவாய் உள்ள தொல் பொருட்கள் ..... காட்சிப்படுத்தப்படுகின்றன.
(1) திரைசேரியில் (2) நூதனசாலையில்
(3) சுவடிச்சாலையில் (4) ஆவணாக்கப்பகத்தில்

36. ஆரோக்கிய வாழ்வு பற்றி மாணவர்களிற்கு ..... வழங்கப்பட்டது.
(1) ஒத்துழைப்பு (2) கண்காணிப்பு (3) வழிப்புணர்வு (4) பாதுகாப்பு

- **பின்வரும் பாடலை வாசித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

போகாதே போகாதே என் கணவா
பொல்லாத சொர்ப்பணம் நானும் கண்டேன்
சாகாமல் என்னோடு வாழுமையா - இந்த
சண்டையும் பேச்சையும் தள்ளுமையா

37. தலைவியின் எதிர்பார்ப்பு யாது?
(1) பிரிவு (2) பிரியாமை (3) கனவு (4) மரணம்

38. சொர்ப்பணம் என்பது யாது?
(1) கனவு (2) நித்திரை (3) நனவு (4) அழகு

39. எதிர்மறை வினையாக அமைவது
(1) சண்டை (2) பொல்லாத (3) என்னோடு (4) போகாதே

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ. அங்கே வந்த வேடன் தமயந்தியைப் பாம்பிடமிருந்து மீட்டான்.
ஆ. நளன் காட்டிலே தனியாகத் தமயந்தியை விட்டு நீங்கினான்.
இ. அப்போது தமயந்தி அங்குவந்த பாம்பின் வாய்ப்பட்டுப் பதைப் பதைத்தாள்
ஈ. இருளிலே கணவனைக் காணாது கதறியழுதாள்
உ. எங்கு தேடியும் கணவனை காணாது அலைந்தாள்

(1) ஈ, ஆ, அ, இ, உ (2) இ, ஈ, அ, உ, ஆ
(3) உ, ஈ, இ, ஆ, அ (4) ஆ, ஈ, உ, இ, அ

(40 புள்ளிகள்)

www.lkedu.lk

n Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC

தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரி - (தே.பா)

முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 10

சுட்டெண் .....

தமிழ் மொழியும் இலக்கியமும் II

நேரம் : 2 மணித்தியாலங்கள்

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

பகுதி II

01. சுருக்கமான விடை தருக?

1) பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
"நீரெடுத்து வருவார் கவள் மணி நித்திலப் புன்னகை"

2) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
"சுதந்திரத் தீ விடுதலையாகப் பரவிக் கொளுந்து விட்டு எரிந்தது"

3) "கரை" என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்கள் அமைக்க.

4) கட்டுரையின் பிரதான உறுப்புக்களைக் குறிப்பிடுக.

5) மனே, மோன என்பன எப்பிரதேச வழக்குச் சொற்கள் என குறிப்பிடுக.

6) கண்மனியும் கரந்தனும் பேருந்தில் பயணம் செய்தனர். இக் கூட்டு வாக்கியத்தை தனி வாக்கியங்களாக எழுதுக.

7) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
தமிழர்கள் எழுதி வந்த பழங்காலத்தில் எழுத்து எப்படிப்பட்டது என்று தெரிந்தது

8) "மூதூர் என்பதைப் பிரித்துக் காட்டுக.

9) "காத்து" என்ற பிரதேச வழக்குச் சொல்லின் பொது வாழ்க்கை எழுதுக.

10) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"புள்ளை இஞ்சைதான் நின்றவன்"

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களில் கட்டுரை எழுதுக.

1) இயற்கையன்னை தமக்களித்த பரிசு பூமி. அது எம்மைத் தாங்குகின்றது. வாழ வழி செய்கிறது. நீர் தருகின்றது. தாவரங்கள் வளர உதவுகின்றது. உணவு வலை, உணவுச் சங்கிலி என்பவற்றைப் பேணி நாம் வாழ வழிவகுக்கின்றது. எனவே நாம் அதனை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. பூமியின் இயற்கை தன்மை பாதுகாக்க வேண்டும் என்பரை வலியுறுத்தும் வகையில் விளக்கக் கட்டுரை.

www.kedu.lk

2) இன்று போக்குவரத்தானது பாரிய வளர்ச்சி கொண்டுள்ளது. வீதி அபிவிருத்தித் திட்டங்கள், நவீன போக்குவரத்துச் சாதனங்கள், வீதி பாதுகாப்பு என்பன அதிகரித்துள்ள போதிலும் நாளுக்கு நாள் பீதி விபத்துக்கள் அதிகரித்து செல்கின்றன என்பதை வலியுறுத்தும் ஒரு மேடைப் பேச்சு.

3) குடும்பத் தலைவிகள் பொருள் தேடி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்குச் செல்வதனால் பொருளாதாரம், அந்தஸ்த்து முதலான விடயங்களில் உயர்கின்றன என்ற கருத்துடைய ஒருவருக்கும் உரிய பராமரிப்பின்மை, ஒழுக்கக் கேடு முதலான காரணங்களால் குடும்பங்கள் சிதைகின்றன என்ற கருத்துடைய ஒருவருக்குமிடையேயான ஓர் உரையாடல்

4) ரவி படிப்பிலும் திறமையிலும் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவன். எனினும் அவனது நண்பர்களின் போதனையால் வெளிநாட்டு மோகம் அவனைப் பற்றிக் கொண்டது. படிப்பில் அவனது கவனம் குறைய ஆரம்பித்தது. அவன் தான் எண்ணியபடி வெளிநாடு சென்றான். ஆனால் அங்கு சென்ற பின்பு தான் தாய் நாட்டின் அருமை புரிந்தது. அங்கு சென்ற இளைஞர்கள் பலர் தன்னைப் போலவே துண்பப்படுத்துவதைக் கண்டு கொண்டான். அவன் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான்..... என்பதை மையமாகக் கொண்ட சிறுகதை.

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 25 - 30 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. அறிவு வளர்கின்றது, தொழில் கிடைக்கின்றது, சமூக நன்மதிப்பு ஏற்படுகின்றது. கற்றவர்களை உலகம் மதிக்கின்றது, கடவுளை வணங்கத் துணை செய்யக் கல்வி கல்வியல்ல. இதனை வள்ளுவர் “கற்றதனாலய பயனென் கொல் வாலறிவன் நற்றான் தொழார் எனின், என்கிறார்.

கல்வியைப் போலவே கடவுள் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப் பருவதே ஏற்ற பருவமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும். இதனாலேயே “தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்” என மூத்தோர் கூறினர். ஆதலினால் இளமையிலேயே கற்றலையும், கடவுள் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அ.்.து ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும்.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியம். மக்களால் மிகவும் விரும்பிப் படிக்கப்படும் ஓர் இலக்கிய வடிவமான சிறுகதை காலத்திற்குக் காலம் வளம் பெற்று வளர்ந்து வருகின்றது. சிறுகதைக்கு ஒரு திட்டமான வரைவிலக்கணம் கூறுவது கடினம்.

www.lkedu.lk

அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் குதிரைப் பந்தயம் போன்று சிறுகதையின் தொடக்கமும் முடிவும் விரைவும் - சுவையும் மிக்கதாக விளங்க வேண்டுமெனவும் இரைமணி முதல் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் படித்து முடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென கூறியுள்ளார். சிறுகதையானது அளவில் சிறியதாகவும் இறுக்கமும், கட்டுக்கோப்பும், முழுமையும், ஒருமைப்பாடும் கொண்ட அமைப்புடையதாகவும் இருத்தல் வேண்டும். செம்மையான பாத்திரம் வார்ப்பும், சொற் சிக்கனமும், உயிர்த்துடிப்பும், செறிவும், திட்டமும் மிக்க நடையும், கதைக்குப் பொருத்தமான தொடக்கமும் முடிவும் சிறுகதைக்கு இன்றியமையாதன. சிலவற்றைக் கூறிப் பலவற்றைச் சிந்திக்க வைப்பதாகச் சிறுகதை அமைய வேண்டும்.

1) சிறுகதை எவ்வகை இலக்கிய வடிவத்தைச் சேர்ந்தது?

2) சிறுகதைக்கு இன்றியமையாதவை எவை எனக் கூறப்பட்டுள்ளன?

3) அமெரிக்க எழுத்தாளர் சிறுகதைக்கு முன்வைக்கும் வரைவிலக்கணம் யாது?

4) சிறுகதை எவ்வகையான அமைப்புடையதாகக் காணப்பட வேண்டும்?

5) சிறுகதை எவ்வாறு அமைய வேண்டும்?

(10 புள்ளிகள்)

05. ஆட்கொல்லி நோயினால் தந்தையை இழந்த நண்பனுக்கு ஆறுதல் கூறி கடிதம் எழுதுக.

அல்லது

கொரோனா தொற்றிலிருந்து எமது சமூகத்தை பாதுகாப்போம் என்ற கருப்பொருளில் அமைந்த துண்டுப்பிரசுரம்.

(தலைப்பு, விளிப்பு, விடயம், வெளியீடு, திகதி என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்)

(15 புள்ளிகள்)

www.kedu.lk

www.lkedu.lk

n Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC

தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரி - (தே.பா)

முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 10

சுட்டெண் .....

தமிழ் மொழியும் இலக்கியமும் III

நேரம் : 2 மணித்தியாலங்கள்

கவனிக்க.

- ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை எழுதுக.

1) "மடைத்தலையில் ஓடும் மீன் ஓட உறுமீன் வருமளவும் வாதயிருக்குமாம் கொக்கு"
   அ) இங்கு மடைத்தலை என்பது யாது?
   ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?

2) "கணக்காயரில்லாத ஊரும் பிணக்கறுக்கும்
   மூத்தோரை இல்லாத அவைகளனும்...."
   அ) கணக்காயர் என்ற சொல்லின் பொருள் யாது?
   ஆ) மூத்தோரிடம் எதிர்பார்க்கப்படும் கடமை யாது?

3) "மாது மடங்கலும் மால்விடையும் பொன்
   னாகமும் நாகமும் நாண நடந்தார்?
   அ) மடங்கல் என்பதன் பொருள் யாது?
   ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள இலக்கியம் எது?

4) தாழு முள்ளத்தார், சோர்வினர், ஆடுபோல் தாவிப் பல பொருள் நாடுவோர்
   அ) இங்கு ஆட்டின் செயல் யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது?
   ஆ) முயற்சியற்றவர்களின் இயல்புகளைத் தருக?

5) பூத்தஜோதி வதனம் திரும்புமேல்
   புலனழிற்தொரு புத்துயிரெய்துவேன்
   அ) ஜோதி என்பதன் பொருள் யாது?
   ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?

6) "புலங்களோடு தரணமும் ஆவியும்
   போந்து நின்ற விருப்புடன் மானிடன்...."
   அ) இங்கு காரணம் என்று குறிப்பிடப்படுவன யாவை?
   ஆ) ஆவி என்ற பதம் குறித்து நிற்பது?

www.kedu.lk

7) "அது கிடக்க எடுத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை"

அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) யாருக்கு கூறப்பட்டது?

8) "யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்....."

அ) "கேண்மை" என்பதன் எதிர்ப்பதம்

ஆ) நல்லவர்களின் நட்பு யாருக்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

9) "தெள்ளியவாலின் சிறு பழுத்தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்....."

அ) இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் யாது?

ஆ) கயம் என்ற பதம் குறித்து நிற்பது யாது?

10) "சாதகங்கள் புரட்டுவார் பொய்மைசேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்....."

அ) மதி என்பது எதனைக் குறித்து நிற்கின்றது?

ஆ) இப்பாடலடியை பாடியவர் யார்?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதியையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

1) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா 0 மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாாம்

அ) இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது?

ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

2) கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பார்த்துண்ணுந்
தன்மையிலான ரயலிருப்பு மிம் மூன்று
தன்மை பயத்த லில்

அ) இப்பாடல் இடம்பெற்ற நூலையும் நூலாரியரையும் குறிப்பிடுக.

ஆ ஒருவர் வாழ்க்கைக்கு நன்மை தராதவை எவை என கூறப்படுகிறது.

www.lkedu.lk

3) யானை அனையவர் நன்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப்பாடல் எத்தகைய நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும்?
ஆ எத்தகைய நட்பினை விலக்க வேண்டும் என கூறுகின்றது?

4) நீரெடுத்து வருவதற் கவள் மணி
நித்தி லப்புன்னகை சுடர் வீசிடப்
பேரெடுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
பேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெடுத்த புலையியற் சாரர்கள்
தேசபக்தர் வரவினைக் காத்தர் போல்

அ) பாரதி சிறுமியின் வருகைக்காக எவ்வாறு காத்திருந்தார்?
ஆ இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

5) உரிமை உள்ளவர்களும் குறித்த ஓரிடத்துக்குப் போய்த்
தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவது இல்லை.
கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள்
அபிப்பிராயத்தை அரசாங்கத்தார்க்கு தெரிவிப்பது வழக்கம்.
அந்த பாரிய கூட்டம் விசுவநாத பிள்ளையின்
தலைமையில் நடக்கின்றது. அந்தக் கூட்டத்திற்கு வாதமகா
சபை என்றும் பெயர் வைத்துக் கொள்ளலாம்.

அ) சட்ட சபைக்கான பிரதிநிதி எவ்வாறு அக்காலத்தில் தெரிவுசெய்யப்பட்டனர்?
ஆ இக்கூட்டத்திற்கு இடப்பட்ட பெயர்.

(20 புள்ளிகள்)

03. விவேக சிந்தாமணி அறிவுடையோர், அறிவற்றவர் பற்றி கூறுமாற்றினை விளக்குக.

அல்லது

பாரதியார் சுய சரிதையில் கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக் காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

04. நாவலர் வாதாடுவதற்காக சபைக்கு சபைக்கு வரும் தோற்றம் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

அல்லது

நீதிப்பாடல்கள் தரும் நீதிக்கருத்துக்களினை விளக்குக?

(15 புள்ளிகள்)

www.kcc.lk

- **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.**

05. பாரதியார் சுயசரிதையில் ஒருவர் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

06. "உருவில் பெரியோரெல்லாம் அறிவில் பெரியோருமல்லர். உருவில் சிறியோரெல்லாம் அறிவில் சிறியோருமல்லர்" வெற்றிவேற்கை பாடலை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்

07. "நாவலர் எழுந்தார்" என்ற கட்டுரைக்கும் தலைப்புக்குமு் இடையிலான பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

www.lkedu.lk